[2002 அக்டோபர் 29

64—

கதர் கிராமத் தொழில்கள்

***16353—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, இளம்புவனம் கிராமம் அருகில் உள்ள கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கிராமத் தொழில்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) தற்போது வாரியத்தின்கீழ் புதியதாகக் கதர் கிராமத் தொழில்கள் ஆரம்பிக்கும் நோக்கம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிக் கவி பாரதி பிறந்த எட்டயபுரத்திற்கு அருகில் உள்ள இளம்புவனம் கிராமம், எட்டயபுரம் தாலுகா பகுதிக்கு உட்பட்டது. பின்தங்கிய பகுதியாக உள்ள எட்டயபுரம் தாலுகா பகுதியிலே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாகக் கையகப்படுத்தப்பட்ட அந்த நிலத்திலே கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக சிறு தொழில் தொடங்கப்பட்டால், அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்குத் தொழில் வாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையிலே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அந்தக் கிராமத்தை, அந்த இடத்தைத் தேர்வு செய்து; அங்குத் தொழில் புரிவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

2002 அக்டோபர் 29]

(முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொகுதி, இளம்புவனம் கிராமம் அருகிலுள்ள கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் தற்போது புதிதாக எந்தக் கிராமத் தொழிலும் தொடங்க உத்தேசமில்லை. வாரியத்தின் நிதி நெருக்கடி நிலைமை காரணமாகவும், ஏற்கெனவே தொடங்கப்பட்ட கதர் கிராமத் தொழில் அலகுகளை மட்டுமே நன்கு செயல்படுத்திட வாரியம் கருதுவதாலும், இயங்கி வரும் அலகுகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லாததாலும், புதிதாக அலகுகளை ஆரம்பிக்க இயலாத நிலையில் வாரியம் உள்ளது. மேலும், கதர் கிராமத் தொழில் ஆணையம் அறிவித்திருக்கும் விளிம்புத் தொகைத் திட்டத்தின்படி வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற தனி நபர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு வாரியத்தின் மூலம் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

65—

கால்நடை மருத்துவமனை

***19068—திரு வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட வேப்பனப்பள்ளி ஒன்றியம், குப்பச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,